**2018 – 2019 +1 வணிகவியல் 2,3,5 மார்க் வினா விடைகள்**

**அத்தியாயம். 3. தொழிலில் நடவடிக்கைகளின் வகைகள்**

**1. வியாபாரம்:** பொருட்களின் உற்பத்தி கூடத்திலிருந்து நுகரும் மையங்கள் வரை நடைபெறும் அனைத்து செயல்பாட்டினை வியாபாரம் என்கிறோம்

**2. வர்த்தகத்தின் வரையறைகள்**

"இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் தொடர்ச்சியாக நடைபெறும் உற்பத்தி அல்லது கொள்முதல் மற்றும் விற்பனை மற்றும் மனித தேவையைப் பூர்த்தி செய்வதன் மூலம் கிடைக்கும் செல்வம்" - **ஸ்டீ.ஃ.பன்சன்.**

"சமுதாயத்தின் தேவை மற்றும் விருப்பத்தினைப் பூர்த்தி செய்ய, ஒரு நிறுமத்தை அதற்கான நடவடிக்கையில் செயல்பட வைக்கின்ற எந்த ஒரு செயலும் வர்த்தகம் ஆகும் - **முசல்மென் மற்றும் ஜாக்சன்.**

**3. தொழில் நடவடிக்கைகளின் வகைகள் யாவை?**

அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம்

**4. உற்பத்தித் தொழில்** (Industry) **என்றால் என்ன?**

வளங்களை இயந்திரம் மற்றும் தொழில் நுட்பத் திறமையுடன் உபயோகிக்கவல்ல பொருளாக மாற்றக் கூடியதே உற்பத்தித் தொழில் என்கிறோம்.

**5. வணிகம்** (Commerce) **என்றால் என்ன?**

இது பொருட்கள் மற்றும் சேவைகளைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்குப் பரிமாற்றம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

ஒரு நாடு அல்லது மாநிலத்தின் இந்த அனைத்து நடவடிக்கைகளும் வணிகம் என்கிறோம்.

**6. உற்பத்தித் தொழில்களின் வகைகள் யாவை?**

உற்பத்தித் தொழில்களை செயல்பாடுகள் மற்றும் அளவுகள்அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**I. நடவடிக்கைகள் அடிப்படையில்**

அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்
ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்
இ. சேவைத் தொழில்கள்

**II. அளவுகள் அடிப்படையில்**

தொழில் முதலீடுகளின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

i. குறுந் தொழில்கள்
ii. சிறு தொழில்கள்
iii. நடுத்தரத் தொழில்கள்
iv. பெருந் தொழில்கள்

**7. தொழில் நடவடிக்கைகளின் வகைகளை விவரி**

அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம்

**அ. உற்பத்தித் தொழில்** (Industry)

வளங்களை இயந்திரம் மற்றும் தொழில் நுட்பத் திறமையுடன் உபயோகிக்கவல்ல பொருளாக மாற்றக் கூடியதே உற்பத்தித் தொழில் என்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையைத் தயாரித்து அளிக்கும் நிறுவனங்களையே தொழிற்சாலை என்கிறோம்.

உதாரணம். சிமெண்ட் உற்பத்தித் தொழில், ஜவுளி உற்பத்தித் தொழில்.

**ஆ. வணிகம்** (Commerce)

இது பொருட்கள் மற்றும் சேவைகளைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்குப் பரிமாற்றம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

ஒரு நாடு அல்லது மாநிலத்தின் இந்த அனைத்து நடவடிக்கைகளும் வணிகம் என்கிறோம்.

**8. உற்பத்தித் தொழில்களின் வகைகளை விவரி**

உற்பத்தித் தொழில்களை செயல்பாடுகள் மற்றும் அளவுகள் அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**I. நடவடிக்கைகள் அடிப்படையில்**

அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்
ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்
இ. சேவைத் தொழில்கள்

**அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்** (Primary Industries)

முதன்மை உற்பத்தித் தொழில்கள் இயற்கையோடு தொடர்புடையவை. இது இரண்டு வகைப்படும்.

**பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்:** (Extractive Industries)

பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களைக் கொண்டது

எடுத்துக்காட்டு: நிலக்கரி மற்றும் கச்சாஎண்ணை எடுத்தல் முதலியவை.

**மரபுசார் உற்பத்தித் தொழில்கள்** (Genetic Industries)

தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன மரபுத் உற்பத்தித் தொழில்கள் எனப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு .

**ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்**

இது இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியது.

1. தயாரிப்புத் தொழில்கள் (Manufacturing Industries)
2. கட்டுமானத் தொழில்கள் (Construction Industries)

**1. தயாரிப்புத் தொழில்கள்** (Manufacturing Industries)

கச்சாப் பொருட்கள்அல்லது பகுதியாக முடிவு பெற்றப் பொருட்களைப் பயன்படுத்தப் கூடிய அளவில் முடிவுற்ற முழுப்பொருளாக மாற்றும் தொழில்களையே தயாரிப்புத் தொழில்கள் என்கிறோம்.

இவை கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. பகுப்பாய்வு உற்பத்தி தொழில்
2. செயற்கை பொருள் உற்பத்தி தொழில்
3. தொடர் முறை உற்பத்தி தொழில்
4. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்கள்

**1. பகுப்பாய்வு உற்பத்தி தொழில் :**

இத்தொழிற்சாலை ஒரு மூலப் பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரிப்பதை மேற்கொள்ளும்

எடுத்துக்காட்டாக: எண்ணை சுத்திகரிக்கும் தொழிற்சாலையில் கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றைபிரித்தல்.

**2. செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்கள்:**

பல்வேறு வகையான கூட்டுப் பொருட்களைச் ஒன்றாக சேர்த்துப் புதிதாக ஒரு பொருளை உருவாக்கும் தொழிற்சாலைகளையே செயற்கைத் தொழிற்சாலை

எடுத்துக்காட்டு: பாலியஸ்ட், நைலான்,டெ.ஃலான்.

**3. தொடர் முறை உற்பத்தித் தொழில்கள்:**

கச்சாப் பொருள் பல்வேறு படிநிலைகளைக் கடந்து இறுதியில் ஒரு முடிவுற்ற பொருளாக மாற்றுவது தெடர்முறை உற்பத்தித் தொழில் எனப்படுகிறது.

எடுத்துக்காட்டு: குளிர்பானம் தயாரித்தல், மருந்துகள் தயாரித்தல், வண்ணம் தயாரித்தல் போன்றவை.

**4. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்கள் :**

இத்தொழிற்சாலையில் பல்வேறு முடிவுற்ற பொருட்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, ஒரு முற்றுப்பெற்ற பொருளாக மாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டு: தொலைக்காட்சி, மகிழுந்து, கணினி.

**2. கட்டுமானத் தொழில்கள்** (Construction Industries)

கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள்மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே, கட்டுமானத் தொழிற்சாலை

இதில் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி திட்டமிடல் உண்டு.

**இ. சேவைத் தொழில்கள்** (Tertiary Industries)

இத் தொழில்கள் இயல் பொருட்களை உற்பத்தி செய்வது இல்லை.

மாறாக சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்கின்றன.

இவ்வகை சேவை வியாபாரம் பல வகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன.

எடுத்துக்காட்டு: மருத்துவ கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலை, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில் வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களான வங்கியியல், காப்பீடு, பண்டகச்சாலை ஆகியவை இந்தச் சேவைத் தொழிற்சாலையின் உள்ளடங்கும்.

இவ்வகை தொழிற்சாலைகள் கீழ்வருமாறு வகைப்படுத்தபடுகிறது.

1. தனிச் சேவை
2. பொதுச் சேவை
3. விநியோகச் சேவை
4. நிதிச் சேவை
5. தனித்துவச் சேவைகள்
6. தனித்திறன்

**1. தனிச்சேவை:** தனி மனிதன் மற்றும் தனியார் பயிலகமும் அவர்களின் சேவையை மற்றவர்களுக்கு விற்பது தனிச் சேவையாகும்

எடுத்துக்காட்டு: குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீர்ச் செய்பவர், உணவகம், தனியார் பள்ளிகள், வீட்டு வேலையாட்கள்.

**2. பொதுச் சேவை :** அரசு மருத்துவமனை, பள்ளிகள், காவல் நிலையம் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் அரசுக்காக எந்த ஓர் இலாப நோக்கமும் இல்லாமல் சேவை புரிவதே பொதுச்சேவை.

**3. விநியோகச் சேவை :** போக்குவரத்து விற்பனை, பண்டகச்சாலை, பொருட்கள் ஏற்றிச்செல்லுதல், விற்பனையாளர்கள் முதலியன விநியோகச் சேவையில் அடங்கும்.

**4. நிதிச்சேவை :** வங்கியில், கணக்கீடு மற்றும் காப்பீடு ஆகியவைஇதில் அடங்கும்.

**5. தனித்துவச் சேவைகள்:** சிறப்புத் தொழில், திறமை மற்றும் உயர் தொழில் நுட்பச் சேவை ஆகியன இச்சேவையின் கீழ் அளிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு: மென்பொருள் வளர்ச்சித் தணிக்கையியல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, மருத்துவ ஆலோசனை, பரஸ்பர நிதி மேலாணமைச் சேவை, வெளியாட்களிடம் பணி கொடுத்துச் செய்தல் (BPO).

**6. தனித்திறன் :** புதுப்புது எண்ணத்தை உருவாக்குதல், புது தொழில் நுட்பத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் புதுக்கொள்கைகளைக் குறிப்பிட்ட வல்லமையுடைய தனி நபரிடம் ஒப்படைத்தல் ஆகியவை இவற்றில் அடங்கும்.

**II. அளவுகள் அடிப்படையில்**

தொழில் முதலீடுகளின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

i. குறுந் தொழில்கள்
ii. சிறு தொழில்கள்
iii. நடுத்தரத் தொழில்கள்
iv. பெருந் தொழில்கள்

**9. வாணிகம் செயல்பாடுகளை விவரி**

i. **வியாபாரம்**

வணிகம் என்ற சொல் வாங்குதல் மற்றும் விற்றல் செயல்களை உள்ளடக்கியதாகும்.

மேலும் இச்சொல் உற்பத்தி செய்யபட்ட பொருட்களை இறுதி நிலை நுகர்வோருக்கு கொண்டு சேர்க்கும் செயலையும் உள்ளடக்குகிறது.

உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே செயல்படும் நபர் வணிகர் ஆவார்.

வணிகத்தை உள்நாட்டு வணிகம் எனவும் வெளிநாட்டு வணிகம் எனவும் வகைப்படுத்தலாம்.

உள்நாட்டு வணிகத்தை மொத்த வணிகம் என்றும் சில்லறை வணிகம் என்றும் மேலும் வகைப்படுத்தலாம்.

ii. **போக்குவரத்து**

உற்பத்தி செய்த பொருட்களை உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தும் விற்பது அரிது.

அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களுக்கு சென்று சேர்க்க வேண்டிய பணியை போக்குவரத்து செய்கிறது.

அதாவது உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர்கட்கு பொருளை நகர்த்தும் ஒரு ஊடகமாக (Medium) போக்குவரத்து விங்குகிறது.

iii. **வங்கியியல்**

வங்கிகளின் உதவியின்றி எந்த தொழில் அமைப்பும் இயங்க முடியாத அளவிற்கு வங்கிச் சேவை மகத்துவம் பெற்று விளங்குகிறது.

வங்கிகள் தொழில் அமைப்புகளிடம் உள்ள பணத்தை வைப்புகளாக பெறுவதுடன் தொழில் அமைப்புகட்கு தேவைப்படும் நிதியை பல்வேறு கடன் திட்டங்கள் மூலம் கிடைக்க வகை செய்கிறது.

இவ்வாறு எந்த ஒரு தொழில் அமைப்பிற்கும் குருதி ஓட்டமாக விளங்கும் நிதியை வழங்குவதும் வங்கிகள் ஒரு பெரிய பங்களிப்பை அளிக்கின்றன.

iv. **காப்பீடு**

வியாபாரம் நடத்துவது என்பது முழுக்க முழுக்க இடர்பாடு செறிந்த செயலாகும்.

வியாபார நிறுமங்கள் இடர் என்ற கடலில் எப்போதும் நீந்திச் செல்லும் கப்பல்கள் ஆகும்.

எல்லா தொழில் நிறுமங்களும் தீ, களவு, சூறாவளி, நிலநடுக்கம், கடல் நடுக்கம், வெடிவிபத்து, இயந்திர கோளாறு போன்ற பல தரப்பட்ட இடர்பாட்டால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றன.

இந்த இடர்பாடுகள் ஏற்படுவதை தடுக்க முடியாவிடிலும் இடரினால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து பண நட்டமின்றி வெளிவர காப்பீடு என்ற கருவி வியாபார தொழில் நிறுமங்கட்கு வரப்பிரசாதமாக விளங்குகின்றது.

v. **பண்டகக் காப்பு**

சாதாரணமாக, பொருட்கள் யாவும் உற்பத்தி செய்யப்பட்ட உடனே விற்கப்படுவதில்லை மற்றும் நுகரப்படுவதுமில்லை.

பொருட்கள் தேவைப்படும் நேரத்தில் அவை கிடைப்பதற்கு ஏற்றவாறு இருப்பு வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பண்டகக் காப்பகங்கள் தொழில் நிறுவனங்களின் பொருட்களைச் சேமித்து வைக்க பேருதவி புரிகின்றன. பொருட்கள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதால் விலை சீராக இருக்க வகை செய்யப்படுகிறது.

## 10. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு

| உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|
| **பொருள்**<br>உற்பத்தி தொழில் என்ற சொல் பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களைத் தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது. | வணிகம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலை குறிக்கின்றது. | வியாபாரம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது. |
| **உள்ளடக்கம்**<br>கச்சா பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கையையும் உள்ளடக்கியது. | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| **முதல்**<br>பொதுவாக உற்பத்தி தொழிலுக்கு அதிக அளவு முதலீடு என்பது தேவைப்படுகிறது. | வணிகத்திற்கு முதல் குறைந்த அளவே தேவைப்படுகிறது. | போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் போதுமான முதல் தேவைப்படும். |
| **இடர்பாடு**<br>அதிக இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. |
| **பரிமாணம்**<br>பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |
| | **பயன்பாட்டு உருவாக்கம்**<br>பொருட்களைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்கு கொண்டு செல்வதன் மூலம் இடப் பயன்பாட்டை உருவாக்குகிறது. | பரிவர்த்தனை மூலம் உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது. |